அதைத்தான் நான் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். என்னுடைய கேள்வியில், வேதாரண்யத்தில், ஏப்ரல், மே மாதங்களில் ஏற்படக்கூடியது என்று தெரிவித்து இருக்கிறேன். டெக்னிக்கலாக அது முற்றிலும் மாறுபட்டது. அதற்கு பதிலே வேறாகத்தான் இருக்க வேண்டும். இந்த அரசுத் தரப்பு பதில் என்னை திருப்திபடுத்தாது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாதங்களைக் குறிப்பிட்டு இருந்தால் சரியாக இருந்திருக்குமோ ?

[முற்பகல் 10-30]

6 ஒழுங்குப் பிரச்சனை

கவன ஈர்ப்பு அறிக்கையில் உள்ள வாசகம் குறித்து.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்சனை எழுப்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கையின் இறுதியில் ''எனவே இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை அனுமதிக்க வேண்டியதில்லை'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இது முற்றிலும் தவறானது. கவன ஈர்ப்புத் தீர்மானம் அனுமதிக்கப் பட்டு, அதற்கான விவரமும் அனுமதிக்கப்பட்ட பிறகுதான் அவைக்கு வருகிறது. அதை அனுமதிக்க வேண்டியது என்பது மரபு. ஆகவே, அனுமதிக்க வேண்டியதில்லை என்று குறிப்பிட்டிருப்பது தவறானது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பி. வி. இராஜேந்திரன் அவர்கள் கொடுக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கை முற்றிலும் மாறுபட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அவர் ஒரு ''டெக்னிக்கல் பாயின்டை'' குறிப்பிடுகிறார். விசாக வெள்ளம் வேறு, கடல் நீர் உள்ளே புகுவது வேறு என்று குறிப்பிடுகிறார். ஆகவே விவர அறிக்கை மீண்டும் அவையில் வைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கான விவர அறிக்கையில் இறுதியில் இப்படி ஒரு வாசகம் கொடுத்திருப்பது தவறானது என்று குறிப்பிட்டார். இறுதியில் இப்படிப்பட்ட விளக்கங்களை ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குக் கொடுப்பதைப் போல கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குக் கொடுக்கக் கூடாது என்று சுட்டிக்காட்டுகிறேன்.